## 8.3 தமிழ்நாடு பூமிதான வாரியம் – ஊரக வளர்ச்சித் துறை கட்டுபாட்டிலிருந்து நில சீர்த்திருத்தத் துறைக்கு மாற்றம் செய்தது

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அ.தி4) துறை

அரசாணை (நிலை) எண்.144 நாள் : 11.10.2006

படிக்க :

1. தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்டம் 1958
2. தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்ட விதிமுறைகள் 1959
3. அரசாணை எண்.284, ஊ.வ.துறை, நாள் 16–10–84
4. அரசாணை எண்.113 ஊ.வ.துறை நாள் 27–5–93
5. அரசாணை எண் 40 ஊ.வ.துறை நாள்–7–2–97
6. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை இயக்குநர் கடித எண்.1339/2006/பூவா 1/ நாள் 20–7–06

**ஆணை**

பூமிதான இயக்கம் 1951 ஆம் ஆண்டு ஆச்சார்ய வினோபா பாவே அவர்களால் அளிக்கப்பட்டது. அவர் 13–03–1956 முதல் 18–04–1957 வரை தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களை மனமுவந்து தானமாக அளித்தனர். அவ்வாறு அளிக்கப்பட்ட நிலங்கள் இன்று பூமிதான நிலங்களாக உள்ளன. இப்படி தானமாக பெற்ற நிலங்களை முறைப்படுத்தவும் அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வினியோகம் செய்யும் பொருட்டும் தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்டம் 1958ல் கொடுக்கப்பட்டது. அதன் விதிமுறைகள் 1959ல் அமலுக்கு வந்தது. முதன்முதலில் 1958ல் பூமிதான வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இந்த சட்டத்தின்படி வாரியத்திற்கு தலைவர் நீங்கலாக 14 பேரை நியமனம் செய்யலாம். மேலும் இந்த வாரியத்தின் பதவிகாலம் 4 ஆண்டுகள் ஆகும்.

2. பூமிதான சட்டத்தின்படி தானமளிக்கப்பட்ட நிலங்கள் அரசிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு வட்டாட்சியர்களால் உறுதியாக்கம் செய்யப்பட்ட பின் சார்பதிவாளர்களால் பூமிதான வாரியத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டு பூமிதான வாரியத்தின்பேரில் பட்டாவாக ஏற்றப்படுகிறது. புள்ளி விவரங்களின் அடிப்படையில் பூமிதான வாரியத்திடம் 28,126.15 ஏக்கர் நிலங்கள் இருந்ததில் 20,295.83 ஏக்கர் நிலங்கள் தேவைப்படும் ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது போக, மீதம் 7,830.32 ஏக்கர் நிலங்கள் உள்ளன.

3. 1984 ஆம் ஆண்டு பூமிதானப் பணியாளர்கள் அரசு அலுவலர்களாக வரன்முறை செய்யப்பட்டனர். ஒரு தனித்துணை ஆட்சியரும், 12 துணை வட்டாட்சியர்களும் மாற்றுப்பணியில் பூமிதான வாரியப் பணிகளை பார்த்து வந்தனர். பூமிதானப் பணியாளர்கள் ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைக்கப்பட்டு 1993ல் சென்னைக்கு மாற்றப்படும் வரை, ஒரு தனித்துணை ஆட்சியர் தனி அலுவலராக இருந்து பணியை பார்த்து வந்தார். பின்னர் தமிழ்நாடு பூமிதான வாரியம் 1988ம் ஆண்டு மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்கத்தில் கீழ்கண்ட பணியாளர்களுடன் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரை தனி அலுவலராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

| வ.எண் | பதவி | அனுமதிக்கப் பட்ட பணி யிடங்கள் | நிரப்பப்பட்ட பணி யிடங்கள் | காலி பணியிடங்கள் | எந்த தேதி முதல் காலியாக உள்ளது என்ற விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | உதவியாளர் | 1 | 1 | – | – |
| 2 | இளநிலை உதவியாளர் | 4 | 2 | 2 | 1–8–05 முதல் ஒரு பணியிடம் 1–12–05 முதல் இன்னொரு பணியிடம் |
| 3 | தட்டச்சர் | 1 | 1 | – | – |
| 4 | ஓட்டுநர் | 1 | – | 1 | 4–03–03 |
| 5. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | – | |
| 6 | அலுவலகஉதவியாளர் | 2 | 1 | 1 | 01–11–05 |
| 7. | பூமிதானஆய்வாளர்கள் | 9 | பணியிடங்கள்திருச்சி திண்டுக்கல், கோவை, காஞ்சிபுரம், மதுரை, விருதுநகர் தருமபுரி, ஈரோடு, திருநெல்வேலி | | |
| | **மொத்தம்** | **19** | **6** | **4** | |

மேற்கண்ட பணியாளர்களுக்கு கீழ்கண்ட அரசு தலைப்பின் கீழ் ஊதியம் வழங்கப்படுகிறது

2515–00–ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்,

001–நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் 1 திட்டத்தில் சேராதது

ஏ ஹெச் கொடை கிராமங்களில் ஆய்வு
(து.தொ.கு.எண்.2515–00–001–ஏ ஹெச் –0008)

2006–07– ம் வரவு செலவுத் திட்டத்தில் கீழ் கண்டவாறு நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சம்பளம் | – | ரூ. 13,03,000 |
| அகவிலைப்படி | – | ரூ. 9,06,000 |
| பயணப்படி | – | ரூ. 96,000 |
| மான்யம் | – | ரூ. 2,96,000 |
| **மொத்தம்** | **–** | **ரூ. 26,01,000** |

**4.** பூமிதானத்தின் பரிணாம வளர்ச்சியாக கிராமதானம் உள்ளது. இதில் ஒரு கிராமத்தில் இத்திட்டத்தில் சேர்ந்த அனைவரது நிலங்களையும் கிராம சபைக்கு ஒப்படைத்து பொதுவில் வைத்து சாகுபடி செய்து விளைச்சலை அவரவர் பங்கிற்கேற்ப பிரித்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராமதானத்தில் சேர்ந்தவர்களின் நிலம் கிராம சர்வோதய பஞ்சாயத்தின் பேரில் பதிவு செய்யப்படும். இவ்வாறு 1700 கிராமங்கள் கிராமதானமாக கண்டறியப்பட்டு 237 கிராமங்கள் கிராமதானமாக சம்பந்தப்பட்ட வட்டாட்சியாளர்களால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

## 8. MISCELLANEOUS

5. தமிழ்நாட்டில் 13 பூமிதான சேவைக் கூட்டுறவு சங்கங்களும் 32 கிராமதான சேவைக் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. அதன் செயற்பதிவாளராக தமிழ்நாடு பூமிதான வாரிய தனி அலுவலர் உள்ளார், பூமிதான வாரியத்திற்கு கீழ்கண்டவாறு நிதி இருப்பு உள்ளது

| | | |
|---|---|---|
| 1 | நிரந்தர வைப்பு நிதி | ரூ. 1,00,18,815.00 |
| 2 | சேமிப்பு கணக்கு | ரூ. 24,63,853.00 |
| **மொத்தம்** | | **ரூ. 1,24,82,668.00** |

மேற்கண்ட தொகை பூமிதான நிலங்களை நில எடுப்பு செய்த வகையில் இழப்பீட்டுத் தொகையாக பெறப்பட்டு இதுநாள் வரை சேர்ந்த தொகையாகும்

6. மேற்கண்டவாறு பூமிதான வாரியம் அடிப்படையில் நில சம்பந்தபட்ட விவரங்களைக் கையாளுகிறது. இது ஊரக வளர்ச்சித் துறைக்கு சார்புடையதாக இல்லை. மேலும் இதில் பணியாற்றும் அலுவலர்களுக்கு வருவாய்த்துறை குறித்த பணிகள் தெரியாமலும் நில அளவை பயிற்சி பெறாமலும் தொடர்ந்து இதனை கையாண்டு வருகின்றனர். இதேபோல் பூமிதான ஆய்வாளர்களும் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நியமனம் செய்யப்பட்டுள்ளதால் இவர்களால் முறையாக அறிவிப்பு அளித்தல், ஆக்கிரமிப்பை வெளியேற்றுதல். வருவாய்த் துறையுடன் இணைந்து செயலாக்குதல் போன்ற பணிகளைச் செய்ய இயலவில்லை. பூமிதான வாரியம் இயங்குவதற்கு வருவாய்த்துறையின் அனுபவம் கீழ்கண்ட காரணங்களுக்காக வேண்டப்படுகிறது.

- பூமிதானமாக உறுதியாக்கம் செய்யப்படவேண்டிய பணியும் வருவாய்த்துறைளை சார்ந்தே உள்ளது.
- பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா மாற்றப்பட வேண்டிய பணியிலும் வருவாய்துறையின் பணியே தேவையாகும்.
- பூமிதான நில ஆக்கிரப்புகளை அகற்றி அதனை மீண்டும் பூமிதான வாரியத்தில் சேர்ப்பது வருவாய்த்துறையால் மட்டுமே இயலும்.
- ஆக்கிரமிப்புகளை பொருத்தமட்டில் பூமிதான வாரிய தனி அலுவலர் எந்த உத்திரவினை பிறப்பித்தாலும் அதனை வருவாய்த் துறையே செயலாக்கிட முடியும்.
- பெரும்பாலான இனங்களில், அதாவது எல்லை பிரச்சனை போன்றவற்றில் வருவாய்த்துறையின் உதவியே தேவைப்படுகிறது.
- பெரும்பாலான பூமிதான கிராமதான நில விவரங்கள் வருவாய்த்துறையிலேயே உள்ளன. அனைத்து விவரங்களும் வருவாய்த் துறையிலிருந்தே தனி அலுவலரால் பெறப்பட வேண்டியுள்ளது.
- நில எடுப்பு செய்யப்படும் இனங்களில் வருவாய்த்துறையே இப்பணிகளைச் செய்கிறது. பூமிதான வாரியம் வருவாய்த் துறையைச் சார்ந்தே பணிபுரிய வேண்டியுள்ளது.
- 1993 வரை இப்பணிகளை வருவாய்த்துறையிலிருந்து இத்துறையில் மாற்றுப்பணியில் பணிபுரிந்த அலுவலரே செய்து வந்துள்ளனர்.

7. இக்காரணங்களினால் தமிழ்நாடு பூமிதான வாரியம், நிலசீர்திருத்தத் துறைஆணையரின் கீழ் சிறப்பாக செயல்படமுடியும். நில சீர்திருத்தத் துறை ஆணையகம் பூமிதான நடவடிக்கைகளைக் கையாள தகுதியான துறையாக கருதப்படுகிறது. எனவே பூமிதான வாரியத்தையும், வாரியத்திலுள்ள பணியிடங்கள், நிலங்கள் மற்றும் நிதியையும் வருவாய் துறையின் கீழ் நில சீர்திருத்தத் துறை ஆணையகத்திற்கு மாற்றியும் வருவாய் நிலச் சீர்திருத்தத் துறையைச் சார்ந்த பணியாளர்களை இவ்வாரியத்திற்கு பணியமர்த்தும் வரை, தற்போது இவ்வாரியத்தில் பணியுரியும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையைச் சார்ந்த பணியாளர்களையே பணி மாறுதல் அடிப்படையில் பூமிதான வாரியத்திலேயே தொடரவும் அரசாணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

8. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தபின் பூமிதான வாரியத்தையும் வாரியத்திலுள்ள பணியிடங்கள் நிலங்கள் மற்றும் நிதியையும் வருவாய் துறையின் கீழ் நில சீர்திருத்த துறை ஆணையக் கட்டுபாட்டிற்கு மாற்றி அரசு ஆணையிடுகிறது. இதனை தொடர்ந்து வருவாய் நில

சீர்திருத்த துறையை சார்ந்த பணியாளர்களை இவ்வாரியத்திற்கு பணியமர்த்தும் வரை தற்போது வாரியத்தில் பணியுரியும் கீழ்கண்ட ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி சார்ந்த பணியாளர்களையே பணிமாறுதல் அடிப்படையில் (on transfer of service) பூமிதான வாரியத்திலேயே தொடரவும் அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | உதவியாளர் | 1 |
| 2. | இளநிலை உதவியாளர் | 4 |
| 3. | தட்டச்சர் | 1 |
| 4. | ஓட்டுநர் | 1 |
| 5. | பதிவறை எழுத்தர் | 1 |
| 6. | அலுவலக உதவியாளர் | 2 |
| 7. | பூமிதான ஆய்வாளர்கள் | 9 |
| | **மொத்தம்** | **19** |

இவ்வாறு மாற்றப்பட்ட பணியாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநரின் நிர்வாக கட்டுபாட்டிற்கு பதிலாக நில சீர்திருத்தத் துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

9. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண் 62250/நிதி (ஊ.வ.)/2006 நாள் 11–10–2006 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்